போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 கார்த்திகை 26
சென்னை, 11—12—48

விசை
16

சென்னை ஹைகோர்ட் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் ராஜமன்னார் அண்ணாமலைப் கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் தென்னாட்டுக் கலாசாரம் லியவற்றிற்கும் வடநாட்டுக் கலாசாரம் முதலியவற்றிற்கும் இடையே அடிப்படை றுமை இருக்கிறது என்று பேசி இருக்கிறார். இது உண்மைதானா? நாம் பேசத் வையில்லை, படம் பேசுகிறது!

சேவல் வந்தது சேவல்!

"பொன்னி"—ஆமாம், திராவிடர் இயக்க வளர்ச்சிக்குக் கிடைத்துள்ள அந்த அரிய கலைப் பத்திரிகை ஓர் அழகான பகுதியை அமைத்திருக்கிறது அதன் வாசகர்களுக்கு விருந்தளிக்க! — வாசகர்களுக்கு விருந்தும் ஆளவந்தார்களுக்கு மருந்தும்! அந்தப் பகுதியின் பெயர் "இந்தி வநதது இந்தி" என்பது! "பொன்னி" ஆசிரியருக்கு ஆச்சரியம் தம்மை ஈன்றெடுத்த அருமைத் தமிழ் மொழியையே கற்றுணராத தமிழர்கள் ஆயிரம் ஆயிரமாக உலவும் இத்தமிழகத்தில் வேற்று நாட்டு இந்தி கட்டாய பாடமாக நுழைவதைக் கண்டு! ஆகவேதான் அவர் கொஞ்சம் ஆச்சர்யத் தொனியிலேயே அமைத்தார் வாசகத்தை—"**இந்தி வந்தது இந்தி**" என்று! பாவம் அவர் கண்டாரா நம் அமைச்சர்கள் சொந்த மொழி எக்கேடு கெட்டாலும் சரி டில்லி மொழி அரியாசனம் ஏறினால் போதும் என்று கருதும் தாராள மனோபாவம் படைத்த—தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் என்பதை! அவர் "சங்கம் எனும் தூய தொட்டிலில் வளர்ந்த பிள்ளை"யிடம் அளவற்ற அன்பு கொண்டவர், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட உயர் தமிழின் சிறப்பை நன்குணர்ந்தவர், "என் தமிழ் முதலில்! அயல் மொழி பிறகு" என்றெண்ணும் தூய சிந்தையர்! அவருக்கு செந்தமிழை ஒதுக்கித் தள்ளிவிட்டு வடமொழிக்கு வெண்சாமரம் வீசும் இந்த ஓமந்தூரார்களின் போக்கு புரியவில்லை — எப்படிப் புரியும்—அவரென்ன "பர்மிட்டு"க்கும் "லைசென்சு"க்கும் சர்க்கார்மாளிகையைச் சுற்றி வரும் எம். எல். ஏ யா, அல்லது தேசீயத் தியாகத்தை கொள்முதலாகக் கொண்டு அரசியல் கள்ளமார்க்கட்டில் தொடர்வட்டி வியாபாரம் செய்யும் பொதுநலத் தொண்டரா அல்லது எந்தப் பிரகாசத்தைக் கவிழ்த்து எந்த ரெட்டியாரை தூக்கிவிடலாம்—எந்த ரெட்டியாரை ஒழித்து எந்த முதலியாரை மந்திரியாக்கலாம்—எந்த சுப்பராயனை ஏற்றிவிட்டு எந்த குருபாதத்தை இறக்கலாம் என்று அரசியல் சதுரங்கம் ஆடும் அற்புதத் தலைவர் காமராஜரா—அல்லது அவரை ஆசிரியராகக் கொண்டிருக்கும் ஏடு ரெட்டியார் மந்திரி சபையின் இதயமும் மூளையும் தானாக இருப்பதாகத் தம்பட்டமடித்துக்கொள்ளும் "தினசரி"யா—என்ன காரணம் இருக்கிறது அமைச்சர்களின் அரசியல் புலிவேஷம் அவருக்குப் புரிய! புரியவில்லை, புரியவில்லை என்பது மட்டுமல்ல, ஆச்சர்யப்படுகிறார் ஆளவந்தார்கள் அருந்தமிழைப் பரப்ப வேண்டிய நேரத்தில், தமிழ்நாடு தமிழ் அறியாது தவிக்கும் இந்த தருணத்தில், தமிழகத்தில் தமிழர் பலர் தமிழ் மொழியை ஓதியுணர முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கும் இந்நாளில் தமிழர் வேண்டாத இந்தித் தொல்லையை விலை கொடுத்து வாங்குகின்றார்களே என்பதை அறிந்து!

"பொன்னி" ஆசிரியருக்கு மட்டுமா நமக்குக் கூடத்தான் புரியவில்லை, நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் யாருக்குமே புரியவில்லை ஏன் இந்நாளில் இந்தி இங்கு நுழைக்கப்படுகிறது என்பதை அறிய! அதுவும் **ஆங்கில ஏகாதிபத்தியம்** கூடாது என்று அகிலம் அதிரக் கூவியவர்களாலேயே **இந்தி ஏகாதிபத்தியம்** பூரணகும்பம் கர்ப்பூர தூப தீப ஆராதனையோடு வரவேற்கப்படுமானால் இந்த "மாயம்" யாருக்குத்தான் புரியும்!

"பொன்னி" ஆசிரியர், இந்தி நுழைந்ததைக் கண்டதுமே இந்தி வந்தது இந்தி என்று ஆச்சரியத்தோடு எழுதி இருக்கிறாரே, இதோ, சென்னையிலே, அமைச்சர்கள் இந்தியை நுழைப்பதைவிட ஆச்சரியமான நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறதே, இதைக் கேள்விப்பட்டால் என்ன சொல்வாரோ தெரியவில்லை—ஒருவேளை **சேவல் வந்தது சேவல்!** என்று எழுதுவார் போலும்!

உண்மையிலேயே அந்த இந்தி சம்பவத்திற்கும் இந்த சேவல் நிகழ்ச்சிக்கும் மிகுந்த வேறுபாடு கிடையாது! இந்தி அரக்கன் தமிழ்க் குமரியை தன் இருப்புக் காலின் கீழ் போட்டு மிதித்து துவைக்கத்தான் வேண்டும் என்று எழுதுகிறார்களே காருண்ய மூர்த்திகள் அவர்களேதான் இந்த சேவல் மகாத்மீயத்தையும் நாள் தவறாமல் எழுதி வருகின்றனர்! இந்தி புராணம் பாடும் திருவாய்கள்தான் சேவல் புராணமும் பாடுகின்றன! இந்திக்கு ஜே போடும் தேசபக்த திலகங்கள்தான் திருமுருகானந்த சேவலுக்கும் ஒரு ஜே போடுவதுமட்டுமல்ல அதனுடைய அருமைத் திருஉருவத்தையும் படமெடுத்துப் பெரிய அளவில் வெளியிடுகின்றன! அதே பாரததேவி, அதே தினமணி—தினசரி அதே சுதேசமித்திரன், அதே ஹிந்து! அவர்களேதான் சேவல் செந்திலாண்டவனை வழிபடுவதைப் பற்றியும் வாசாமகோசரமாக வரைந்து தள்ளுகிறார்கள்!

சீனாவிலே **சியாங்-கே-ஷேக்** இறுதிப் போராட்டம் நடத்துகிறார், அமெரிக்காவிலே **ட்ரூமன்** சீனாவுக்கு உதவலாமா வேண்டாமா என்று ஆலோசிக்கிறார், ஆப்ரிக்காவிலே வெள்ளை வெறியன் **மலான்** இந்தக் கறுப்பருக்கும் வெள்ளையருடன் சரிசமமாக வாழ உரிமையா என்று கொக்கரிக்கிறான், பாரிசிலே உலக மன்றம் கூடி பாலஸ்தீன் பிரச்சினையை விவாதிக்கிறது, ஒரு புறத்திலே இரஷ்யா அமெரிக்காவிடம் இருக்கும் அணுக்குண்டுக்குப் பலம் அதிகமா அல்லது தான் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சுற்றித் தொங்கவிட்டிருக்கும் "இரும்புத்திரை"க்குப் பலம் அதிகமா என்று நுணுக்கமான அரசியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது, காஷ்மீர போர் இந்தியா — பாக்கிஸ்தான் எல்லைகளுக் கிடையே நடந்து கொண்டிருக்கிறது, சென்னையிலே தமிழர் அறப்போர் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் நடந்த வண்ணம் இருக்கிறது, இந்திய தேசீய **காங்கிரஸ்** சீனநாட்டு கோமின்டாங் கட்சியைப் போல அழிவுப் பாதையை நோக்கி வேகமாகப் பயணம் செய்துகொண்டிருக்கிறது என்று வடநாட்டு அரசியல் தலைவர் ஒருவர் காங்கிரஸை எச்சரிக்கிறார், ஊரிலேயும் உலகி

லேயும் இவ்வளவு சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன, ஆனால் சுதேசமித்திரன், 5-12-48ல் தன்னுடைய போஸ்டரில் ஆறடி உயரமுள்ள . எழுத்துகளிலே செய்தி தருகிறது—"**கச்சாலேஸ்வரர் கோயிலில் ஈஸ்வரனை தியானிக்கும் சேவல்!**"

மித்திரனுக்கு அன்றைய சம்பவங்களிலே வேறு எதுவுமே முக்கியமானதாகத் தெரியவில்லை, ஒரு சேவல், பக்தர்கள் போடும் பொரி கடலைக்கும் அவல் பொரிக்கும் ஆசைப்பட்டு ஒரு கோயிலுக்கு வருகிற சர்வ சாதாரண சிறு நிகழ்ச்சியொன்று மிக அற்புதமான சம்பவமாகத் தோன்றுகிறது, போஸ்டரிலே முதல் இடம்! உள்ளே, இதழிலே, பெரிய படம்—சேவல், முருகன் முன் நிற்பதாக! இவ்வளவும் இந்த விஞ்ஞான காலத்தில்! 1948ல்! நமது நிலவுலகத்துக்கும் சந்திர மண்டலத்துக்கும் போக்கு வரத்து வசதி ஏற்படுகிற நாள் தூரத்தில் இல்லை என்று அறிவியல் அறிஞர்களால் ஆதாரபூர்வமாகப் பேசப்படும் இந்நாளில்! அதுவும் விஞ்ஞானம் தந்த அச்சுப் பொறியிலே, விஞ்ஞானம் சுட்டிக்காட்டிய மின்சாரச் சுழலிலே அச்சடிக்கப்பட்டு, விஞ்ஞானத்தின் அன்பளிப்பாகிய ரயில் வண்டியிலே பயணம் செய்து, விஞ்ஞானத்தின் உதவியாலே ஆறுயிரம் மைலுக்கு அப்பால் உள்ள ராய்ட்டர் என்னும் செய்தி நிலையம் தருகிற செய்திகளை அன்றன்றுடம் மக்களிடையே பரப்புகின்ற ஓர் ஏட்டில்! செ! என்ன வெட்கக்கேடு! விஞ்ஞானத்தின் துணைகொண்டா அஞ்ஞானத்தை வளர்ப்பது!

சென்னையிலே ஒரு சாதாரண கோயில் இருக்கிறது—பெயர், கச்சாலீஸ்வரர் ஆலயம்! அங்கே நாள்தோறும் மாலை 6 மணிக்கு ஒரு சேவல் வருகிறதாம். ஐயர் மணி அடித்ததும் சேவல் உள்ளே கோயிலுக்குள் நுழைகிறதாம், நேரே மடமடவென நடந்துசென்று சுப்பிரமணியர் சந்நதியில் நிற்கிறதாம், ஆடாமல் அசையாமல் மணிக்கணக்காக அங்கேயே இருக்கிறதாம், இரவு ஐயர் சேவலை உள்ளே விட்டுவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு போய்விடுகிறாராம், காலையிலே கதவு திறந்துவுடன் வெளியே போய்விடுகிறதாம் சேவல், மறுபடியும் மாலையில் வருகிறதாம்—இதுதான் இந்த ஏடுகள் தரும் தகவல்!

பத்திரிகைகளிலே இந்தச் சேதியைப் படித்ததும் நாம்கூட ஆச்சரியப்பட்டோம்—சேவல் நாள்தோறும் ஆண்டவனைத் "தரிசிக்கும்" அற்புதத்தை எண்ணி அல்ல—அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை சாதாரணப் பொது அறிவு கொஞ்சமேனும் இருப்பவர்களுக்கு—அது மிக மிக சாதாரண நிகழ்ச்சி—நமது ஆச்சரியத்திற்குக் காரணம் இந்த சாதாரண சம்பவத்தை ஏதோ ஒரு அதி அற்புத சித்திரம்போல தீட்டிக் காட்டும் இந்த ஆரிய ஏடுகளின் அங்கலாய்ப்பு!

"கண்டறியாதன கண்டோம்" என்று இந்த ஏடுகள் களித்துக் குதித்துக் கூத்தாடுகின்றனவே பாமர மக்களைப்போல, என்ன நடந்துவிட்டது அப்படிப் பிரமாதமாக "இதுகள்" இப்படிக் கூச்சல்போட? ஒரு சேவல் தினந்தோறும் கோயிலுக்கு வருகின்றது!! "**தினந்தோறும்** வருகிறது சார் **தினந்தோறும்**" என்று சொல்லி இந்த ஏடுகள் அந்த **தினந்தோறும்** என்பதிலே ஒரு பூரிப்பும் எக்காளமும் அடைகின்றன! நமக்கோ அது **தினந்தோறும்** வருகிறது, ஆகவே ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று தோன்றுகிறது! சேவல் ஒரு விலங்கு. விலங்குகளுக்கே உள்ள பொதுவான இயற்கை எதையும் பழக்கத்தாலேயே செய்வது என்பது தவிர சிந்தித்துச் செய்வது என்பது கிடையாது. சிந்தனை—பகுத்தறிவு—எது நல்லது எது கெட்டது என்பதை எண்ணிப் பார்த்துப் பிரித்து உணரும் ஆற்றல்—சிந்தித்துப் பார்ப்பது, நினைத்துப் பார்ப்பது, ஆலோசித்துப் பார்ப்பது என்றெல்லாம் சொல்கிறார்களே அது, மனிதனுக்குத்தான் உண்டே தவிர மற்ற விலங்குகளுக்கு இல்லை. மனிதன் எதையுமே சிந்தித்துச் செய்கிறான், மற்ற விலங்குகள் எதையுமே பழக்கத்தால் செய்கின்றன! மனிதன் தஞ்சாவூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போகவேண்டுமானால் எண்ணிப்பார்க்கிறான் எப்படி எப்படிப் போக வேண்டுமென்று! ரயிலிலே போகலாமா, பஸ்ஸிலே போகலாமா, எது செலவு குறைவு, எது வசதி மிகுதி, எதிலே போனால் விரைந்து போகலாம், எதிலே போனால் உடலுக்கு அலுப்பு இல்லாமல் இருக்கும் அல்லது எது முதலிலே கிடைக்கும் என்று இவ்வளவையும் எண்ணிப் பார்க்கிறான், எண்ணிய பிறகு ஏதோ ஒன்றைத் துணிகிறான், துணிந்தவண்ணம் செய்கிறான்! ஆனால் அதே நிலையில் ஒரு சேவல் அல்லது ஒரு பூனை அல்லது ஒரு நாய், ஆடு, மாடு, குரங்கு, கரடி, சிங்கம், புலி ஏதோ ஒன்று, எதுவாக இருந்தாலும் என்ன செய்யும்! தஞ்சாவூரிலிருக்கும் ஒரு சேவல் தஞ்சாவூரிலேயேதான் இருக்கும் அதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைக்கும் வரை. தாங்கமுடியாத வெப்பமோ தாங்கமுடியாத குளிரோ பொறுக்கமுடியாத உபத்திரவமோ உணவு கிடைக்காத பஞ்சமோ ஏதோ ஒரு "வற்புறுத்தல் நிலை" ஏற்பட்டால் ஒழிய அது தனக்குப் பழக்கமாகிவிட்ட இடத்தைவிட்டு நகராது. இப்படிப்பட்ட ஏதோ ஒரு காரணம் அதனை வெளியே போய்த்தான் தீரவேண்டும் என்ற நிலைக்கு உள்ளாகுமானால் அது வெளியே போகும்—ஆனால் எங்கே போகும்? அதுதான் அதற்குத் தெரியாது! என்னென்ன இடங்கள் தனக்கு வசதியாக இருக்கின்றன, அதற்கு எப்படி எப்படிப் போகவேண்டும், எப்போது எப்போது போகவேண்டும் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கவோ பிறரைக் கேட்டு அறியவோ "ரயில்வே கைட்" பார்க்கவோ அதற்குத் தெரியாது! கால் போன வழியிலே போகும்! ஆனால் வழியிலே எங்கேயோ ஓர் இடத்திலே உணவு தட்டுப்பட்டுவிட்டால் அது அங்கேயே தங்கிவிடும்—உணவு கிடைக்கும் வரை! கிடைத்ததைப் பொறுக்கித் தின்றுவிட்டு எங்கேயேனும் சுற்றிக்கொண்டு கிடக்கும், மறுபடியும் பசி எடுக்கிற நேரத்தில் தினந்தோறும் அங்கே வரும். இதைவிட வேறு எங்கேனும் நல்ல உணவு கிடைக்குமா, போய்ப் பார்க்கலாமா, வேறு இடங்களைக் கண்டு அங்குள்ள உணவினை உண்டு பார்த்து, அந்த உணவிற்கும் இந்த உணவிற்கும் உள்ள உயர்வு தாழ்வுகளை ஒப்பிட்டுப் பார்த்து சிறந்த ஒன்றை உண்ணலாமா என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்க முடியாது சேவலால்! மனிதனாய் இருந்தால் அப்

(10-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிசயம்'' என்று! வருகிறது வெளவால் பழம் நோக்கி— முன்னே பழம் இருந்தபோது வந்திருக்கிறது, இப்போதும் மரம் பழுத்தது, எனவே வருகிறது, பழக்கம் வெளவாலைத் துரத்துகிறது போ மரத்தை நோக்கி என்று! எனவே வருகிறது! அதிலே வியப்பதற்கு ஒன்றுமில்லை அடடா வெளவாலின் பக்தியே பக்தி என்று சொல்லி நாக்கைத் தட்டுவதற்கும் ஒன்றுமில்லை!

சிலர் கேட்கிறார்கள் கோயிலுக்குள்ளே நுழைந்த சேவல் ஏன் சுப்ரமண்யர் சிலைக்கருகே மட்டும் செல்லவேண்டும், ஏன் வேறு இடங்கள் பிராகாரங்கட்குப் போகக்கூடாது என்று! இந்தக் கேள்விக்குப் பதில் கூறத் தேவையில்லை, இந்தக் கேள்வியே தவறு. "ஹிந்து" கோயில்களிலே சிலை இல்லாத பகுதி ஏது? நுழைந்தவுடனே நந்தி, இப்பக்கம் திரும்பினால் பிள்ளையார், அப்பக்கம் திரும்பினால் பன்னிருகையர், அந்தப் பக்கம் வரிசை வரிசையாக அறுபத்திமூவர்,—கல் வடிவில்! மற்றொரு பக்கம் அதே அறுபத்திமூவர் பித்தளை வடிவில், இன்னொரு பக்கம் நவக்கிரக தேவர்கள்! ஒரு புறம் விநாயகர்—மனைவியே இல்லாத பிரமச்சாரியாக! ஒரு புறம் விநாயகர்-இரண்டு மனைவிகளோடு! ஒரு புறம் திருமுருகர் நடராஜ நடன மூர்த்தியாக! மற்றொரு புறம் திருமுருகர் இளமை ததும்பும் பால சுப்பிரமணியராக! ஒரு புறம் சிவபிரானார் நஞ்சுண்ட கண்டராக! மற்றொரு புறம் சிவபிரானார் அர்த்தநாரீசுரராக! "நம்" கோயில்களுள்ளே கிழக்கே மேற்கே வடக்கே தெற்கே கீழ்மேற்கே தென்வடக்கே வடகிழக்கே மேல் வடக்கே எங்கும் எவ்விடத்தும் சிலை சிலை சிலை சிலைதானே! அப்படியிருக்க சேவல், சுப்ரமணியர் சிலை அருகே மட்டும் எப்படிப் போயிற்று என்று கேட்பதிலே அர்த்தமில்லை அல்லவா! அது எப்புறம் போயிருப்பினும் அப்புறததில் ஓர் சிலை இருந்துதான் இருக்கும் சுப்ரமண்யர் இல்லாவிட்டால் பால கணபதி, பால கணபதி இல்லாவிட்டால் பார்வதி நாதன், பார்வதி நாதன் இல்லையேல் பர்வத வர்த்தனி! ஏதோ ஒரு சிலை சேவல் முன்னால் தட்டுப்பட்டுத்தானே இருக்கும்! அது தற்செயலாக முதல் நாள் போன இடம், பக்தர்கள் இருந்த இடம், பொரி கடலை வீசப்பட்ட இடம் பழக்க வாசனையால் அதன் வாசஸ்தலமாக மாறிவிட்டது. ஆகவே அங்கே மட்டும் ஏன் வந்தது என்று கேட்பதிலே பொருள் கிடையாதல்லவா?

* * *

"எல்லாம் சரி தோழரே! இவ்வளவு அர்த்தமற்ற அற்ப சம்பவத்தை அகிலம் அறியாத அற்புதம் என்று இந்தப் பெரிய ஏடுகள் பேசுகின்றனவே, பக்த சேவல் படமும் போடுகின்றனவே, அது ஏன்?" என்று கேட்கிறீர்களா, என்னைக் கேட்டு என்ன பலன்? நானா அந்தப் பத்திரிகைகளை நடத்துகிறேன்? ஆமாம் இருக்கட்டும், நீங்கள்தான் ஏன் இப்படி அர்த்தமற்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்? நாடெங்கும் சண்டை சச்சரவுகள் அதிகமாகவேண்டும், கொலை குத்து மிகுதியாகவேண்டும், வல்லடி வழக்குகள் அதிகமாக வேண்டும்—அதுவும் பணக்கார பெரிய மனிதர்கள் கூட்டத்தில் என்று வக்கீல்கள் விரும்புகிறார்களே அது ஏன்? மேலும் மேலும் நோயாளிகள் கிடைக்கமாட்டார்களா, மேலும் மேலும் புதுப்புது நோய் தோன்றமாட்டாவா என்று டாக்டர்கள் நினைக்கிறார்களே, அது ஏன்? ஊரிலே அடிக்கடி சாவு வராதா சீக்கிரம் சீக்கிரம் மக்கள் செத்துப்போக மாட்டார்களா என்று சுடலைக் காவலன் எண்ணுகிறானே, அது ஏன்? நாட்டிலே மூட நம்பிக்கை மேலும் மேலும் வளராதா, குறி கேட்பதில் பூதத்தை, பிசாசை விரட்டுவதில் பேய் ஓட்டுவதில் மக்கட்கு நம்பிக்கை தோன்றாதா என்று குறிசொல்பவன் ஆவல் மீதூர பிரார்த்தனை புரிகிறானே, அது ஏன்? இந்தக் கேள்விகட்கெல்லாம் என்ன விடையோ அதுதான் விடை இந்த ஆரிய ஏடுகளின் மூட நம்பிக்கைப் பிரசாரம் ஏன் என்ற கேள்விக்கும்! ஏன் நான் சொல்வது உங்கட்குப் புரியவில்லையா— இது புரியாவிட்டால் உங்கட்கு வேறு எதுதான் புரியப்போகிறது! மூடநம்பிக்கை, தாய்! ஆரியம் அதன் ஏக புத்திரன்! ஆரியமாயை நாட்டிலே செல்வாக்குடன் இருக்க வேண்டுமானால் மூடநம்பிக்கை ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்ற வேண்டும். மூடநம்பிக்கை அழிந்தால் ஆரியம் அழியும். மூட நம்பிக்கை வளர்ந்தால் ஆரியம் வளரும். இதுதான் காரணம் ஆரிய ஏடுகளுக்கு மூடநம்பிக்கை மீது இத்துணை அளவு கடந்த காதல் இருப்பதற்கு! ஆமாம், கள்ளனின் கருத்து மக்களின் அஜாக்கிரதைத் தன்மையை வளர்ப்பதில்தானே—தன்னாலே வளர்க்க முடியாவிடினும் அது தானாகவாவது வளரவேண்டும் என்று ஆசைப் படுவதில்தானே இருக்கமுடியும்!

சிகப்பு நாடாவின் மகத்துவம்!

நம்மில் யாரேனும் ஒருவர் புதிதாக ஒரு ஊருக்குக் குடியேறியிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். முதலில் அவர் என்ன செய்யவேண்டும்? அரிசிப் பங்கீடு அட்டை வாங்கவேண்டும் அதற்காக பங்கீடு அலுவலகத்திற்குப் போகிறார். போனதும் உடனே அட்டை கொடுத்துவிடுவார்களா? அவருடைய பெயர் முதலியவற்றைக் குறித்துக் கொண்டு மூன்று நாட்கள் பொறுத்து வாருங்கள் என்று சொல்லிவிடுவார்கள். அதையும் இவ்வளவு சுலபமாகச் சொல்லிவிடுவார்களா? மாட்டார்கள். நான்கு மணி நேரம் அவரை நிற்க வைத்து ஐந்தாவது மணி அடிக்கும் போது ஏதோ பெரிய மனசு வைத்து சொல்வதுபோல சொல்வார்கள். பிறகு அவர் வீட்டிற்குப் போய் மூன்றாவது நாள் மறுபடியும் வருவார். "இன்னும் சூபர்விஷன் ரிபோர்ட் கிடைக்கவில்லை, அடுத்த வெள்ளிக்கிழமை வாரும்" என்ற விடைதான் அவரை வரவேற்கும். சரி அடுத்த வெள்ளிக்கிழமை மறுபடியும் வருவார் அப்போதாவது அட்டை கிடைக்கும் என்று நம்புகிறீர்களா? அதுதானே கிடையாது! "ரிபோர்ட் வந்துவிட்டது, இன்னும் 'ஆபீசர்' சிக்னேசர் கிடைக்க

(12-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

மனப் புயல்

இராதாமணாளன்

இருபத்திநான்காவது பகுதி

சுட்டுப் பொசுக்கினான்

பழத்தூரில் நடைபெற்ற சுயமரியாதைப் பொருட்காட்சிக்குச் சுற்றுப் பக்க ஊர்களிலிருந்து மக்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். விஞ்ஞான அபிவிருத்திக் கருவிகள்; உலக நாடுகள் ஒவ்வொன்றின் தனித்தனிப்படங்கள்; குரங்கிலிருந்து மனிதன் தோன்றி படிப்படியாக நாகரிக மடைந்த விதத்தைச் சித்தரித்துக் காட்டும் சித்திரங்கள்; பழைய உலக அமைப்பைத் தலைகீழாக மாற்றிய புரட்சி வீரர்கள், நாட்டு விடுதலைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த தன்னலம் கருதாச் சிங்கஏறுகள், முடியரசைத் தொலைத்து குடியரசை ஏற்படுத்த போராடிப் போராடி வெற்றிவாகை சூடிய தலைவர்கள், அற்புதமான கருவிகளைச் செய்துதந்த விஞ்ஞானிகள், அறிவு ஒளி பரப்பிய அறிஞர்கள், மக்களைத் தட்டியெழுப்பிய கவிஞர்கள் முதலியோரின் உருவப் படங்கள், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத இன்ன பிற பொருள் அத்தனையும் அந்தப் பொருட்காட்சியில் முக்கிய இடம் பெற்றிருந்தன!

வந்திருந்த மக்களுக்கு ஓவியங்களைக்காட்டி குமார் விளக்கம் கூறினான். விஞ்ஞானக் கருவிகளைக் காண்பித்து, ஒவ்வொன்றையும் கண்டுபிடித்த விஞ்ஞானியைக் குறித்தும், கண்டுபிடிக்கப்பட்ட வழி, பயன் ஆகியவற்றைப் பற்றியும் கோபால் சோர்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தான். பல்வேறு நாடுகளின் அமைப்பு, ஓடும் நதிகள், உயரமான மலைகள், உற்பத்தியாகும் பொருள்கள், ஜனத்தொகை, அவர்கள் பேசும் மொழிகள், சமுதாய அமைப்பு முதலிய விவரங்களை உலகப் படத்தைச் சுட்டிக் கண்ணன் குட்டி சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருந்தான். பிறநாடுகளில் விஞ்ஞான முறையில் விவசாயம் முன்னேற்றமடையும் வழிவகைகளைப்பற்றி விளக்க உரை ஆற்றுதல், வந்திருந்த மக்களுக்கு வசதிகள் செய்து தருதல், ஆகியவேலைகளில் காளிமுத்து ஈடுபட்டிருந்தான். மாதர்களை அன்பாக வரவேற்று அவர்களின் தேவைகளைத் தானே அறிந்து பூர்த்திசெய்தல், இடைஇடையே குட்டி சுயமரியாதைப் பிரசங்கங்கள் செய்தல் ஆகிய பணியில் வேணி தன்னை மறந்திருந்தாள். கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் அதிக பங்கு எடுத்துக்கொண்டு பொருட்காட்சி சிறப்பாக நடைபெற பெரும் உதவியளித்தார்கள்.

தாசி வீடு சென்று திரும்பிய கடவுளைக் கட்டையால் அடிக்கும் மட்டை அடி திருவிழாக்கள், மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற கத்தா காலட்சேபங்கள், பாரதக்கூத்துகள் முதலிய கண்ணைருவிக்காட்சிகள் முக்கியமாக கிராமங்களில் நடைபெறுவதைநிறுத்தி, அறிவு வளர இத்தகு பொருட்காட்சிகளை நடத்தவேண்டுமென்று ஒருநாள் குமார் யோசனை கூறினான். ஆமாம், மக்களை நல்ல வழியில் அழைத்துச்செல்ல பயிற்சி யளிக்கும் சீரிய முறை இது என்றான் கோபால். திட்டமெங்கே திட்டமெங்கே என்று துடிதுடித்துக் கேட்கும் வாலிபர்கள் ஒவ்வொரு ஊரிலும் செய்யவேண்டிய பயனுள்ள முக்கிய வேலை இது எனக் கூறினான் கண்ணன். நம் மூரிலேயே அதிலும் இவ்வாண்டிலேயே சுயமரியாதைப் பொருட்காட்சியை நடத்தி முடிக்கும் வரை நான் தூங்கப்போவதில்லை என்று சபதம் செய்தான் காளிமுத்து! சிறிதுநாட்களுக்குப் பிறகு அனைவரின் கூட்டுமுயற்சியினால் பழத்தூரில் அந்தப் பொருட்காட்சி நடைபெற்றது.

குமாரும் வேணியும் ஒருவரை ஒருவர் அன்பாக நேசிப்பதை கோபால் அறிந்து கொள்ளாமலில்லை. அவர்கள் தனக்குப் பயந்து கள்ளத்தனமாகப் பார்வைகளைப் பரிமாறிக் கொள்வதை அவன் கண்டுகொள்ளாமலுமிருக்கவில்லை. ஒத்த உள்ளம் கொண்ட அவ்விருவரும் வாழ்க்கையில் ஒன்றாகப் பிணைவதில் அவனுக்கு அதிருப்தியிருப்பதாகச் சொல்லவும் முடியாது! ஆற்றங் கரையோரத்தில் அன்றொரு நாள் பெண் குலத்தைக் குறித்து மிகக் கேவலமாகக் குமார் திட்டியது கோபாலின் நினைவில் அழியாத ஒலிப்பதிவு ஆகிவிட்டது! மணமாகா வாலிபன் மாதர் இனத்தை மனம் அருவருக்கும் முறையில் திட்டவேண்டியதன் காரணமென்ன, ஒருவேளை யாரையாகிலும் காதலித்து, அக் காதல் கைகூடாமல் போய் விட்டிருக்குமோ என்று பல நாட்கள் கோபால் ஓய்ந்த நேரங்களில் தன் சிந்தனைக்கு வேலை கொடுத்து தெளிவு பெற முயற்சித்திருக்கிறான். அவ்வளவு சஞ்சல மனப்பான்மை கொண்டவனோடு தன் தங்கை வேணி தாராளமாகப் பழகுவது அவனுக்கு அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. எனினும் அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பை அவனால் அணைகட்டித் தடுக்கவும் முடியவில்லை!

சிவன் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து நடத்த ஆதரவு காட்டவும், சொற்பொழிவுகளாற்றவும், பொருட்காட்சி நடைபெற்ற ஒரு வாரத்திற்குப் பின்னர், கோபாலும் கண்ணனும் சோலையூர் சென்றனர். வீட்டிலிருந்துகொண்டு பலவித வண்ணங்களின் சேர்க்கைகளைக் கொண்டு பேசும் ஓவியங்கள் பல தீட்டிக்கொண்டிருந்தான், குமார். வேணி அவனுக்கு வேண்டிய பணிகளை இன்பம் பெருக்கெடுத்தோடும் உள்ளத்தோடு செய்து வந்தான்!

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

11—12—48 சனிக்கிழமை

நச்சுப் பொய்கை!

நல்ல பொருத்தம்!

"அதோ போகிறார் பார் அவர் பெயர் என்ன தெரியுமா?"

"தெரியாதே அண்ணா!"

"தெரியாதா! அவர் பெயர்தான் **ஆநந்த சாகரம்**!"

"ஆநந்த சாகரமா! மெய்யாகவா!"

"ஆமாண்டா தம்பி, ஏன் என்ன ஆச்சரியம்?"

"ஒன்றுமில்லை அண்ணா, அவரைப் பார்த்தால் துக்கமே உருவெடுத்து வந்தாற்போல் அல்லவா இருக்கிறார்! பரட்டைத் தலை, பஞ்சடைந்த கண்கள், குழி விழுந்த கன்னம், உலர்ந்த உதடு, குச்சி போன்ற கைகள், உதிர்ந்த சருகு போன்ற உடல், நூறு தையல் போட்ட கிழிந்த பழஞ் சட்டை, முகத்திலே சோகம் கப்பிய தோற்றம் இத்தியாதி குணங்களுடன் இருக்கும் இவர் பெயரா ஆநந்த சாகரம்—மகிழ்ச்சிக் கடல்! என்ன ஆச்சரியம் அண்ணா!"

"போடா போ! உனக்கு இதெல்லாம் ஒரு ஆச்சரியம்! என்னமோ அவர் அப்பா அம்மா நீண்ட நாள் பிள்ளை இல்லாமல் இருந்து அவரைப் பெற்றார்களாம்! தவமாகக்கிடந்து பெற்ற பிள்ளையானதாலே குழந்தையைக் கண்டதும் அவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லையாம்—ஆநந்த சாகரம் என்று வைத்தார்கள்! இதுகூடவா ஒரு தப்பு?"

"தப்பு என்று சொன்னேன்! பெயர் எவ்வளவு பொருத்தம் என்று நினைத்து ஆச்சரியப்பட்டேன்! அதுகூடவா தப்பு!"

இப்படிப்பட்ட உரையாடல் நாலாறு பேர் கூடுமிடங்களில் அடிக்கடி நிகழக் காணலாம்! ஒரு மனிதருக்கு இருக்கும் பெயரும் அந்த மனிதருக்கு இருக்கும் இயல்பும் எப்போதுமே ஒன்றாக இருக்கும் என்பது கிடையாது! இரண்டுக்கும் இடையே பல சமயங்களில் அகலமான இடைவெளி இருக்கும், சிற்சில சந்தர்ப்பங்களில் இரண்டும் இரு துருவங்களாகக்கூட இருப்பதுண்டு! இரண்டு கண்ணும் அற்றவனாய் இருப்பான்—அவன் பெயர் **கண்ணாயிரம்** என்று இருக்கும். நான்கு வார்த்தைகூட பிழையறப் பேசத் தெரியாத ஆண்மகனாய் இருப்பான்—திருநாமம் மட்டும் **நாவுக்கரசு** என்று சூட்டப்பட்டிருக்கும்! **சுந்தர ரூபன்** என்று பெயர் இருக்கும், உருவமோ அனுமந்த நாராயணன் என்ற பெயருக்கு ஏற்றதாயிருக்கும்! காலணா தர்மமும் செய்ய மனம் இரங்காத கஞ்சத்தனமுள்ள கனவான் பெயர் **கருணாமூர்த்தி** என்றிருக்கும்! படிக்கவே தெரியாத பாட்டியார் **சரஸ்வதிபாய்** ஆகவும், வறுமைத் தேளால் கொட்டப்பட்டு பாலைவன வாழ்க்கையில் உழல்பவள் **இலக்ஷ்மிதேவி**யாகவும், கெட்டழிந்த குணமுடையவள் **சற்குண சுந்தரவல்லி**யாகவும் இருப்பது நாம் காணாத நிகழ்ச்சிகள் அல்ல! மனிதர்களுடைய பெயருக்கும் அவர்களுடைய இயல்புக்கும் நடுவே மட்டும்தான் இப்படிப்பட்ட முரண்பாடு இருக்கும் என்பதில்லை, விலங்குகளின் பெயரும் அஃறிணைகளின் பெயர்களும்கூட இப்படி இருப்பது உண்டு! கொடுமையிற் கொடிய அரவத்தை **நல்ல பாம்பு** என்று வழங்காதார் யார்? எத்தனை இடிந்துபோன கட்டிடங்களுக்கு **சுவர்ண மாளிகை** என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது?

எல்லா சமயங்களிலுமே இதுபோல பொருத்தமற்ற பெயர்கள்தான் சூட்டப்பட்டிருக்கும் என்றல்ல அர்த்தம், சில சமயங்களில் உண்மையாகவே பொருத்தமுள்ள பெயர்களும் இருப்பதுண்டு! எவருக்கும் அஞ்சாத நெஞ்சுடையவன் **வணங்காமுடி** என்று அழைக்கப்படுவதும், நல்ல அழகுள்ள பெண் **அழகுவல்லி** என்று பெயர் சூடிக்கொண்டிருப்பதும் அப்படியொன்றும் அபூர்வமான காட்சிகள் அல்ல!

இந்திய தேசிய காங்கிரசின் 55-வது அகில இந்திய மாநாடு விரைவில் கூட இருக்கிறது! கூடப்போகும் இடத்தின் பெயர் தெரியுமோ, **நச்சுப் பொய்கை**! அந்தப் பொய்கைக்கு அருகே மாநாட்டுப் பந்தல் அமைக்கப்படும் அகண்ட இடமாக அமைந்துகிடக்கும் நிலப்பரப்பு எத்தகையது தெரியுமோ, **ஒரு பாலைவனம்**! ஒரு பாலை வனத்திலே. நச்சுப் பொய்கை என்னும் நீர் நிறை தடாகம் ஒன்றன் பக்கத்திலே காங்கிரஸ் மாநாடு நடைபெறப்போகிறது, எவ்வளவு பொருத்தமான இடம்! எத்துணைப் பொருத்தமான பெயர்! யார், இந்த ஆண்டு காங்கிரஸ் மாநாட்டை, இந்த இடத்திலே நடத்தவேண்டும் என்று முதல்முதல் தீர்மானம் கொண்டுவந்தார்களோ நாமறியோம், ஆனால் அவர்கள் யாராய் இருந்தாலும் சரி அவர்களை நாம் மனமார வாழ்த்துகிறோம் இன்றைய காங்கிரசின் உண்மைத் தன்மையைத் தெள்ளிதின் உணர்த்தும் இயல்பும் பெயருமுடைய இடம் ஒன்றை மாநாட்டுக்குத் தேர்ந்தெடுத்த முன்யோசனைக்காக!

நச்சுப் பொய்கையில் காங்கிரஸ் மாநாடு! நல்ல பொருத்தம்!

காங்கிரஸ் இன்று ஓர் நச்சுப் பொய்கையாகத்தான் இருக்கிறது நாட்டு மக்களுக்கு! ஒரு காலத்தில் அது பாலைவனத்து நீரோடைபோல இருந்தது, தேங்கிக் கிடந்த மக்கள் வாழ்வுக்குத் தென்றலாக இருந்தது, சுருண்டுகிடந்த இந்தியத் துணைக்கண்டத்தைத் தட்டி எழுப்பி விடுதலைப் போர்முனைக்கு அழைத்துச் சென்ற அறப்போர் முரசமாக இருந்தது, வெள்ளைப் பரங்கியன் அமைத்த ஏகாதிபத்தியக் கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கும் ஆற்றல் படைத்த அரிய "டைனமோவாக" இருந்தது, ஆனால் இன்றோ "பாரத

தேவி"யே பகர்வதுபோல கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையிலே இருக்கிறது! காங்கிரஸ் ஏடு சுதந்த்ரா கதறுவதுபோல பாசீசப் பாதையில் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது! மக்களின் உயர்ந்த உரிமையாகிய ஜனநாயகத்தை மரணப் படுகுழிக்கு இழுத்துச் செல்லும் வீர வெட்டியானைக் காட்சி தருகிறது காங்கிரஸ்!

பத்திரிகை சுதந்தரம் பத்திரிகை சுதந்தரம் என்று பார் அறிய புரட்சிக் குரல் எழுப்பிய காங்கிரஸ் இன்று அதிகாரபீடம் ஏறியதும் தங்கள் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லும் உள்ளத் துணிவு கொண்ட ஏடுகள் ஒவ்வொன்றின்மீதும் அடக்குமுறை பாணங்களை அடுக்கடுக்காக வீசியவண்ணம் இருக்கிறது.

உரிமை உரிமை உரிமை என்று உரிமை முரசு கொட்டிய காங்கிரஸ், இன்று, கூட்டம் கூடும் உரிமையையும் உள்ளக் கருத்தை ஊர் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் உரிமையையும்கூட மாற்றுக் கட்சித் தோழர்களிடமிருந்து தட்டிப் பறிக்காத நாளே இல்லை!

"பாரதி பாடலுக்கும் தடையா! சுதந்தர கீதத்துக்கும் தடையா!" என்று அட்வைசர் ஆட்சியினர் பாரதி கீதங்களுக்குத் தடைவிதித்த ஞான்று தடதடவென வீராவேச உரைகளை வாரி வீசிய காங்கிரஸ் இன்று கவிஞர் **பாரதிதாசனின்** கீதங்களை—ஆம் அந்த அற்புத கீதங்களை தன் இன்னிசைக் குரலாலே நாடெங்கும் பரப்பவரும் "குயில்" இதழை "நில்! வராதே நாட்டுக்குள்!" எனத் தடுத்துவிட்டது!

"எங்கள் தலைவர்கள் பேசவும் கூடாதா! ஈதென்ன அநீதி! எவர் பொறுப்பார் இக்கோரம்! ஆகாது இந்த அக்கிரமம்" என்று ஆக்ரோஷத்துடன் பேசிய காங்கிரஸ் இன்று எதிர்க் கட்சித் தலைவர்களை அடக்குவதோடில்லை, மாற்றுக் கட்சி இதழ்களை நசுக்குவதோடில்லை, நாட்டு மக்கள் உள்ளத்திலே புதைந்து கிடக்கும் மூடபனியை அகற்றும் இரணியன், போர்வாள், சர்வாதிகாரி போன்ற நாடகங்களையும் தடைசெய்யத் தயங்கவில்லை!

காங்கிரஸ் இன்று தொழிலாளிகளைக் காட்டிக்கொடுத்து முதலாளிகளை முதுகின்மீது தட்டிக்கொடுக்கிறது! "உற்பத்தியைப் பெருக்குங்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்!" என்று உழைப்பவர் கூட்டத்தை நோக்கி ஓயாது உபதேசம் புரிவதன்றி; முதலாளிகள் பக்கம் திரும்பி "முதலாளிகளே! கூலியை உயர்த்துங்கள், உழைப்பவர்க்கான நல் வசதிகளைப் பெருக்குங்கள்!" என்று சொல்வதில்லை காங்கிரஸ் தலைவர்கள்!

சமஸ்தானாதிபதிகளின் சுகபோக லீலைகளை ஒழித்து அவர்களுடைய ஹிட்லர் தர்பாரை அழித்து, மக்கள் ஆட்சியை ஒவ்வொரு சமஸ்தானத்திலும் நிறுவவேண்டும் என்று அந்தந்த சமஸ்தானத்தில் எழுந்துள்ள உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்கிவிட்டு, சர்தார் படேல்கள் "சமஸ்தானாதிபதிகள் சிறந்த தேசபக்தர்கள் அவர்களைக் குறைசொல்லிக் கொண்டிருப்பது அர்த்தமற்ற வீண் வேலை" என்று பரணி பாடத்தொடங்கி விட்டார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

என்ன விநோதம் பார்!

"சீர் தொண்டன்"

★

என்ன விநோதம் பார்
சென்னைப் பட்டணம் பார்
அர்மீனியன் தெருவு பார்
அங்கே கச்சாலீஸ்வரர் கோவில் பார்
மாலைக் கதிரவன் மறையுது பார்
சேவற் கோழி ஒன்று வருகுது பார்
கோவில் பூஜை சமயம் பார்
குருக்கள் மணியை அடிப்பதைப் பார்
கணகண ஓசை கேட்டதுஞ் சேவல்
குளத்து நீரில் குதிக்குது பார்
சேவல் கோவிலில் நுழையுது பார்
முருகன் முன்னால் நிக்குது பார்
இதுஎன்ன விசித்திரம் நீயே பார்!
சேவலுக்கு என்ன பக்தி பார்!
இந்தச் சேவல் அடியவர் அருள்பெற
மக்கள் கூட்டம் கூடுது பார்!
சேவல் கும்பிடுதா பாடுதா ஐயா
சேவலுக்கு முக்திதான் கிடைக்குமா ஐயா
என்றெலாம் கேக்காதே கேட்பவன் நாஸ்திகன்
மக்கள் அறிவு மங்குது பார்
சேவல் பக்தியின் சிறப்பைப் பார்
இதுவென்ன மடமை என்று கேட்கிறாய்
இதோ வருகிறார் மக்கள் நீயே பார்
இந்தக் கச்சாலேஸ்வரர் சக்தியைப் பார்
அற்புத ஏடது மித்திரன் தாளதில்
இச் சேவல் காயனார் படத்தையும் பார்!

* * * * *

நாமு பாருது தம்பி,
நாயனார் சேவலுக்கு ஒரு
நாலுகாசாவது போடப்பா தம்பி......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாள் மாலை வேணியும் குமாரும் ஊரின் புறத்தே இருந்த மண் கோட்டைக்குச் சென்றார்கள். கோட்டையின்மீது இருவரும் ஏறி நின்றதும், பழத்தூர் வந்த முதல் நாள் கோபால் தனக்குக் காட்டிய தாசித்தோப்பு, யானைமேடு, புலவர் காடு ஆகிய இடங்களின்பக்கம் குமார் ஒருமுறை தன் பார்வையைத் திருப்பினான்! தாசித் தோப்பில் பார்வை பட்டதும் அவ்வளவு விரைவாக அதனைத் திருப்ப அவனால் இயலவில்லை! அன்று அதனைக் கண்டபோது ஏளனச் சிரிப்பு சிரித்தான்! ஆனால் இன்று அதனுள் குமுதம் நிற்பதுபோல் அவனுக்குத் தோன்றி உள்ளத்தில் வேதனையை உண்டாக்கியது! சீ, நீயும் ஒரு பெண்ணா என்று தனக்குத்தானே வெறுப்பாகக் கூறி கொண்டான். அவன் முகமடைந்த மாற்றத்தை வேணி கண்டதும்,

"மகிழ்ச்சி நிறைந்திருந்த தங்கள் முகத்தில் ஏன் அத்தான் மாற்றம்?" என்றுபயந்தகுரலோடுவினவினாள்.

"ஒன்றுமில்லை வேணி!"

"பரவாயில்லை! தங்கள் மனதிலுள்ளதைத் தாராளமாகக் கூறினால் யாராவது தடுத்து விடுவார்களா என்ன?"

"கோபமோ ஐயமோ நீ கொள்வதில்லை என்று உறுதி கூறினால் உன்னைச் சில கேட்கிறேன்!"

"அப்படியே, அத்தான்!"

"சரி! பெண்களுக்குச் சஞ்சல புத்தி யிருக்குமோ?"

"இக் கேள்வி எழக் காரணம், அத்தான்?"

"பார்த்தாயா! கேட்ட கேள்விகளுக்கு மட்டுந்தான் நீ பதில் கூற வேண்டும்!"

"அப்படியே! புயலடித்து மலை வளைந்து கொடுத்ததைக் கண்டிருக்கிறீர்களா?"

"மலை பிளந்ததைப் பார்த்திருக்கிறேன்!"

"அதுதான் அத்தான் பெண்களின் இயற்கையான உள்ளப் பண்பு! புரிகிறதா?"

"தெரிகிறது! விட்டுப்பிரிந்தால் வேறொருவனை மணந்துகொள்கிறார்களே, அது ஏன்?"

"இக்கேள்வியே எனக்குப் புரியவில்லையே! விளக்கிக் கூறுங்கள் பதில் கூறுகிறேன்!"

"வேண்டாம்! இதற்கு விளக்கமும் வேண்டாம், உன் பதிலும் வேண்டாம்!"

"தங்கள் குரல் வேறுவிதமாகக் கேட்கிறதே!"

"உன் காதில் பழுதிருக்கும்!" என்று கிண்டல் செய்பவனைப் போலக் கூறி, தீவிர பலவந்தத்தால் தன் உணர்ச்சிகள் வெளியில் தெரியாதபடி மறைத்துக்கொண்டு, அன்போடு அவள் கையைப்பற்றினான்!

எதனையோ கூற அவன் மறைக்கிறான் என்பதை வேணி அறிந்துகொண்டாள். எனினும், அதைக் குறித்தே மேலும் மேலும் கேட்டால் எங்கு கோபமடைந்து விடுவாரோ என்று அஞ்சி கேட்காமல் அதனை விட்டுவிட்டாள்.

"வேணி, இந்த இன்பம் மாறியோ குறைந்தோ விடாதே!"

"கடலில் தண்ணீர் வற்றிவிடுமா என்று கேளுங்கள், அதுதான் பொருத்தமான கேள்வி!"

"எப்படியோ உன் கண் வலை வீசி என்னைப் பிடித்துவிட்டாய் வேணி!"

"என்னவென்ன? நானா வலை வீசினேன்? இங்குவந்த முதல்நாள் இரவு நான் சோறுபடைத்தேனே, அப்பொழுது புன்னகை செய்தது யார் அத்தான்?"

"கவனமில்லையே எனக்கு..."

"மறைக்கப் பார்க்கிறீர்கள்! சரி! தலைமறைவாக இருந்தபோது, தென்னந்தோப்பில் வெண்ணிலா ஒளியில் இலைபோட்டு உணவு பரிமாறினேனே, அப்பொழுது இன்பமான பார்வையை என்மேல் வீசியதாவது நினைவிருக்கிறதா?"

"என் காதலி குமுதத்தையெண்ணி அல்லவா அப்பொழுது நான் மகிழ்ந்தது! உன்னை அவளாக மாற்றிப் பார்த்துதான் களித்தேனே அன்றி, உன்னை நீயாகவே பார்த்து நான் ஆனந்தமடையவில்லையே?" என்று குமார் கூறவில்லை! எப்படிக் கூறமுடியும்? ஆகவே "ஆமாம்!" என்று ஒத்துக்கொண்டான்!

"இப்படியெல்லாம் சிறிது சிறிதாக வலைபோட்டு என்னைத் தாங்கள் பிடித்துவிட்டு, இப்பொழுது கூறுகிறீர் நான் தங்களை மயக்கிவிட்டதாக!"

கோபம் கொண்டவளைப்போல அவள் நடித்தாள்! கொஞ்சுமொழி பேசி கோபத்தை அவன் தணித்தான்! நேரமாகி விட்டதனால் இருவரும் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்!

வீடுவந்து சேர்ந்ததும், காளிமுத்து குமாருக்கு வந்த ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து தந்தான். குமார் அக் கடிதத்தின் உறையின் மீதுஇருந்தகையெழுத்தைப்பார்த்து விட்டு அதனைப் பிரிக்காமலேயே பெட்டியில் கொண்டுபோய் வைத்தான். இதுபோல் அடிக்கடி வந்த அநேக கடிதங்களை, அவன் பிரித்துப் படித்துப் பார்க்காமல் பெட்டியில் வெறுப்போடு கொண்டுபோய் வைத்ததை வேணி கவனித்துக் கொண்டு வந்திருக்கிறாள். இத்தனை நாட்களாக அதனைக் குறித்து விசாரிக்க அவள் அஞ்சினாள். இன்று இருவரும் இன்பத் தென்றலில் மிதந்தோடிக் கொண்டிருந்த காரணத்தால் அதனைக் குறித்து விசாரித்து அறிய அவள் விரும்பினாள்.

"அத்தான்"

"என்ன வேணி?"

"ஒன்று கேட்கப்போகிறேன்! அதனால் தங்களுக்கு வருத்தமேற்படாதே!"

"எனக்குத் தெரியும், நீ கேட்கப்போவது!"

"ஜோசியம்கூட தங்களுக்குத் தெரியுமா?"

ஜோசியம் என்று அவள் கூறியதற்கு, அவன் மனதில் சரியாக

(11-ம் பக்கம் பார்க்க)

மூல வியாதிகளுக்கு

"யௌவன பிராஷ்"

(கருணைக் கிழங்கு லேகியர்)

ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம். 12 நாள் யௌவன பிராஷ் ரூ 3. 12 நாள் நாகபஸ்பம் ரூ. 2.

சரஸ்வதி வைத்தியசாலை

பழனி S. I.

ஜப்பான் நிபுணர் வருகிறார்!

சென்னை சர்க்கார் கிராம அபிவிருத்தித் திட்டம் வகுப்பதற்காக ஜப்பானிலிருந்து ஒரு நிபுணரை வரவழைக்கப் போகிறார்கள் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. ஏன் இங்கிருக்கும் நிபுணர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்—ஜப்பானுக்குப் போய் இருக்கிறார்களா என்று கேட்கிறான் நம் ஆபீஸ் பையன். "அடே பையா இப்படியெல்லாம் ராஜத்வேஷமாகப் பேசாதேடா! பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஆறுமாத கடுங்காவல் வந்துவிடும் உனக்கு" என்று நாம் அவனைப் பயமுறுத்தினால் "போங்க சார் இந்த மந்திரிகளே இப்படி ராஜத்வேஷமாகப் பேசிப் பேசித் தானே மந்திரிகள் ஆனார்கள்!" என்று எதிர்வாதம் பண்ணுகிறான் அந்தப் பொல்லாத பையன்!

நன்றி செலுத்தவேண்டியதுதான்!

"நம்ம அமைச்சர்கள்" பன்னிருவரும் அடிக்கடி பல "பெரிய மனிதர்"களுக்கு அரிய விருந்து கொடுக்க வேண்டியிருக்கிறதாம் அதற்காக தனித் தனி ஒவ்வொரு அமைச்சருக்கும் ஆண்டுக்கு ரூ 6000 அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் ஓமந்தூராரை பிற அமைச்சர்கள் யாவரும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்களாம்! நல்ல வேளை ஆளுக்கு ரூபா ஆறாயிரத்தோடு நின்றார்களே ஆறு லட்சம் வேண்டும் என்று கேட்காமல்! அதுவரைக்கும் நம்ம அமைச்சர்களுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டியது தான்! இந்த விருந்துகள் எல்லாம் ஏன் வேண்டுமாம் தெரியுமா? இப்படியெல்லாம் விருந்துகள் கொடுத்தால்தான் சர்க்காரின் அந்தஸ்து நிலைநாட்டப்படுமாம்! சொல்கிறார்கள் அமைச்சர்கள்! நாம் நம்பத்தானே வேண்டும்!

புதிய கடவுள் பிறக்கிறார்!

மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் அவர்கள் அண்மையிற் கல்கத்தாவில் பேசும்போது, "சர்க்காரைக் குறைசொல்லும் மனோபாவம் வர வர அதிகமாகிவிட்டது. இது கூடாது. சர்க்காரிடத்தில் எல்லோருக்கும் பக்தி இருக்கவேண்டும்—சர்க்காரை ஒரு தெய்விக சக்தியாகக் கருதி வணங்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அட பாவமே! நம் நாட்டில் ஏற்கனவே இருக்கும் கடவுள்களின் எண்ணிக்கையை ஜனத்தொகையால் வகுத்தாலே ஆளுக்கு $1\frac{1}{2}$ கடவுள் ஆகும் என்று நடிகவேள் ராதா "மகாத்மாவின் தொண்ட"னில் கூறுகிறாரே, இருக்கும் கடவுள்கள் போதாதென்று இது வேறு புது கடவுளா?

(7–ம் பக்கம் தொடர்ச்சி)

மத்திய சர்க்கார் மந்திரிகளோ தத்தம் இலாகாவின் செலவுகளை இரண்டு மடங்கு மூன்று மடங்கு நான்கு மடங்கு என்று ஏற்றி ஏற்றி ஏழை உழவர்களின் முதுகெலும்பை முறிக்கிறார்கள்.

மாகாண சர்க்கார் மந்திரிகளோ புதிய புதிய சிறைச்சாலைகளைக் கட்டுவதிலும் மேலும் மேலும் அடக்குமுறைத் திட்டங்களை வகுப்பதிலுமே தங்கள் நேரம் சிந்தனை உழைப்பு சக்தி திறமை அத்தனையையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

சர்க்கார்தான் இப்படி என்றால் இந்த காங்கிரஸ் சர்க்காரின் உறுப்புகள் என விளங்கும் எம். எல். ஏ. க்களோ பெர்மிட்டுக்கும் லைசென்சுக்கும் அலைந்து அலைந்து திரிவதைத் தவிர நாட்டு மக்களுக்கு நலன் தரும் செயல் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை!

இந்தியாவுக்குள்ளே இந்த நிலை என்றால் வெளியே, பற்பல நாடுகளிலே இந்தியாவின் சார்பிலிருக்கும் தூதர்களோ குட்டிக் குபேரர்களாக இருந்துகொண்டு சர்க்கார் பணத்தை—ஆம்! இந்தியக் கண்டத்து ஏழை உழவர்கள் பணத்தை—தோட்டக் கச்சேரிக்கும் வீண் களியாட்ட கேளிக்கைகளுக்கும் வாரி இறைத்த வண்ணம் இருக்கிறார்கள்!

மாகாணங்களோ உரிமைகள் அவ்வளவும் பறிக்கப்பட்டு எதற்கெடுத்தாலும் டில்லி இருக்கும் திக்கு நோக்கி தெண்டனிட்டு அரைபடி அரிசிக்கும் அந்த "மேல் இடத்து" தயவு கோரி நிற்கும் படியான துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன!

ஆங்காங்குள்ள தாய்மொழிப் பயிர்களை அழிப்பதற்கோ ஹிந்தி எருமை சர்வதாராளமாக மேயவிடப்பட்டு விட்டது.

காங்கிரஸ் அதிகார பீடம் ஏறியபிறகு நாடெங்கும், நாலாபுறமும், இருள்! புரட்டு! பொய்! பித்தலாட்டம்! ஊதாரித்தனமான செலவு! லஞ்சம்! ஊழல்! சகிக்க முடியாத நாற்றம்!

காங்கிரசை வாழ்த்திய உள்ளங்கள் அத்தனையும் இன்று அதனைத் தூற்றுகின்றன! அந்த இயக்கத்தைப் போற்றி வணங்கிய கரங்கள் அவ்வளவும் இன்று அதனைத் தாக்கித் தகர்க்கத் தயார் கூறுகின்றன! காங்கிரசே இந்தியா இந்தியாவே காங்கிரஸ் என்று சித்திர நடையிலே சொல்லோவியம் தீட்டியவர்கள் காங்கிரசை அழிப்பதே இனி எம் தொண்டு என வீரமுழக்கம் புரியத் தொடங்கிவிட்டார்கள், காங்கிரஸ் கட்டிடம் கலகலத்துவிட்டது. அதன் அடிப்படை ஆட்டங் கொடுத்துவிட்டது. சுவர்கள் ஒவ்வொன்றாகச் சரியத் தொடங்கிவிட்டன. எந்த வினாடியிலும் அது குமுறிக் குலுங்கி திடீரென வெடித்து தலைமட்டமாகி விடக்கூடிய அபாயகரமான நிலையிலிருக்கிறது. காங்கிரசின் இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களே சென்ற வாரம் கூறியிருக்கிறார் காங்கிரஸ் முன்போல அவ்வளவு பலமுள்ளதாக இல்லை என்பது உண்மைதான் என்று! இந்தக் கலகலத்துப்போன கட்டிடத்திற்குள்ளே சுதந்தர வெளிச்சமோ தூய்மையெனும் காற்றோ புகமுடியவில்லை. ஆகவே சுயநலத் துர்நாற்றம் இக் காங்கிரஸ் கட்டிடத்தின் தனி உடமையாகி விட்டது.

ஆம்! இன்றைய இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு நச்சுப் பொய்கையாகத்தான் இருக்கிறது!

இந்த உண்மையை மிக அழகாக விளக்குகிறது இந்த ஆண்டு காங்கிரஸ் மாநாடு ஜெய்பூரில் நச்சுப் பொய்கை எனும் "புண்ணிய ஸ்தலத்திலே" கூடப் போகிறது என்னும் பத்திரிகைச் செய்தி!

நச்சுப் பொய்கையில் காங்கிரஸ் மாநாடு! ஆம்! நல்ல பொருத்தம், மிக நல்ல பொருத்தம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படி எல்லாம் எண்ணிப் பார்ப்பான்! சேவல் சிந்தனை ஆற்றல் அற்றது பழக்க உணர்ச்சி (Habitual Instinct) மட்டுமே கொண்டது! ஆகவே அது உணவு தற்செயலாக தட்டுப்பட்டுவிட்ட இடத்திற்குத்தான் போகுமே தவிர வேறு இடத்திற்குப் போகாது. ஆனால் உணவு தட்டுப்பட்ட இடத்திற்கு தினம்தினம், தினம்தினம் தவறாமல் வந்துகொண்டிருக்கும், கடிகாரத்தின் பெண்டுலம் வந்த இடத்திற்கே திரும்பத் திரும்ப முறைப்படி வந்துகொண்டிருப்பது போல! தினம்தினம் வருகிறதே சேவல்—அதே இடத்திற்கு—அதே நேரத்தில் என்று ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை—தினம்தினம் தான் அது வரும், அதுதான் இயற்கை. அதன் உடலுக்கு ஒத்துவராத சீதோஷ்ண மாற்றமோ, உணவு கிடைக்காத நிலையோ அல்லது மக்கள் அடித்துத் துரத்துகின்ற துர்ப்பாக்கிய நிகழ்ச்சியோ ஏதோ ஒன்று ஏற்படாதவரை சேவல் உணவு கிடைக்கும் இடத்திற்கு வருவது உறுதி.

இந்தப் பழக்க வாசனைக்கு ஏற்பத்தான் கச்சாலீஸ்வரர் கோயிலுக்கும் வருகிறது ஒரு சேவல்—இதிலே எது வியப்பிற்குரிய சம்பவம் என்பதுதான் நமக்குப் புரியவில்லை! எத்தனையோ தெருக்களில் சுற்றியதைப் போல அந்தத் தெருவிலும் சுற்றியிருக்கிறது சேவல், எத்தனையோ வீடுகளில் நுழைந்ததைப் போல அந்த வீட்டிலும் நுழைந்திருக்கிறது, (அது ஆண்டவன் வீடு என்பது அதற்குத் தெரியுமா!), ஆனால் எத்தனையோ வீடுகளில் துரத்தியிருப்பார்கள், பிடித்து அறுத்து சமைத்து உண்ணலாம் என்ற சபலம் கொண்டவர்கள்கூட யார்வீட்டுக் கோழியோ நமக்கேன் வீண் வம்பு, பிடித்து அறுத்துவிட்டால் சொந்தக்காரர்கள் வந்து கேட்டால் என்ன செய்வது என்று எண்ணி விரட்டிவிட்டிருப்பார்கள், ஆனால் கோயிலிலே அது நுழைந்தபோது அங்கேயிருந்த பக்தர்கள் விரட்டவில்லை உணவுதேடிவந்த சேவலை ஆண்டவனைத்தேடிவந்தது என்று தவறாக எண்ணிக்கொண்டு (அவர்கள் அப்படி தவறாக எண்ணிக் கொண்டது அவர்களுடைய குற்றம், சேவலின் குற்றமல்ல) பொரி கடலை வீசியிருப்பார்கள்—அது தேடி வந்தது அதைத்தானே, ஆவலோடு தின்றிருக்கும்! நாம்தான் முதலிலேயே கூறினோமே விலங்குகளுக்குபழக்க உணர்ச்சி உண்டே தவிர சிந்தனை ஆற்றல் கிடையாது என்று—பழக்கத்தாலே இந்த இடத்திற்குப் போனால் உணவுகிடைக்கும் என்ற உணர்ச்சி காரணமாக (அறிவு காரணமாக அல்ல) அது மறுநாளும் அதே இடத்திற்கு வந்திருக்கும்! மறுநாளும் சேவலைக்கண்ட பக்தர்கள், "ஆஹா! இரண்டாவது நாளும் சேவல் வந்துவிட்டது! நிச்சயம் பக்தியால்தான் வந்திருக்கிறது" என்று பரவசம் மிக அடைவர். பரவசம்கொண்ட காரணத்தால் பொரிகடலையை கொஞ்சம் அதிகமாக வீசுவர், சேவலும் பரவசம் அடையும்—ஆண்டவன் சந்நிதானத்திலே இருக்கிறோமே என்பதால் அல்ல—அதைப்பற்றி அதற்கென்ன தெரியும்—உணவு தப்பாமல் கிடைக்கிறதே என்பதால்! பிறகு சொல்லவா வேண்டும் சேவலின் செய்கையைப்பற்றி! நாள்தோறும் அதேஇடத்திற்கு வருகிறது உணவுக்காக, பக்தர்களும் அங்கே வருகிறார்கள் தவறாமல், பொரி கடலை வீசுகிறார்கள், சம்பவம் நித்திய நிகழ்ச்சியாகிவிடுகிறது. சேவல் வந்ததும் பொரி கடலை கிடைக்கிறது, அதுவும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு "பக்தர்கள்" தருகிறார்கள், பக்தசேவல் ஆயிற்றே என்ற பயத்தோடு--அன்போடு—அமெரிக்கையாக—அமளி சிறிதும் இல்லாமல் பக்தர்கள் நடந்து கொள்கிறார்கள், பயபக்தியோடு சேவலுக்கு உணவு தருகிறார்கள், அதனை அவர்கள் விரட்டுவதில்லை, அடித்துத் துரத்துவதில்லை, பக்கத்திலே சூழ நின்றுகொண்டு ஆசையோடு தேவையான உண்பொருளை தேவையில்லாத அளவுக்கு வாரி வாரி வீசுகிறார்கள். சேவலுக்கு இதைவிட சுகம் வேறென்ன வேண்டும்—அலைந்து திரிந்து தேடவேண்டிய அவசியம் இல்லை! வயிறார உணவு! விதவிதமான உணவு! தானாக வருகிறது! இந்த சுக போகத்தைத் தேடிக்கொண்டு சேவல் தினம்தினம் ஏன் வராது? அது இவ்வளவு இன்பமான நிலை தானாக வருவதைக் கண்டும் வராமல் நின்றுவிடுமானால் அப்போதுதான் நாம் ஆச்சரியப்படவேண்டுமே தவிர உணவுகிடைக்கிறதே என்ற பழக்க உணர்ச்சி காரணமாக அது தினந்தோறும் வருவதைக்கண்டு ஆச்சரியப்படுவதிலே அர்த்தமுமில்லை, அது தேவையுமில்லை, அது அறிவுடைமையுமல்ல! வீண் பித்தத்தின் முதிர்ச்சி! மூடநம்பிக்கையின் அறிகுறி! புராணப்பொய்யுரைகள் நம் உள்ளத்தை எவ்வளவு இருண்ட குகையாக மாற்றி அமைத்து விட்டது என்பதற்கான அவமானச் சின்னம்!

நாம் பார்க்கிறோம் நம் வீடுகளிலே தப்பித் தவறி ஒரு நாளைக்கு ஏதோ ஒரு பூனைக்கு இரண்டு சோறு போட்டுவிட்டால் பிறகு தினம் தினம் சோறு தேடிக்கொண்டு நம் வீட்டுக்கு அது தவறாமல் வரும் காட்சியை! அதுவும் இரண்டு மூன்றுநாள் சேர்ந்தாற்போல நாம் சோறு பரிமாறிவிட்டால் பிறகு நாம் அடித்துத் துரத்தினால்கூட அந்தப் பூனை நம் வீட்டிற்கு வராமல் இருப்பதில்லை, நாம் உணவு போடாவிட்டாலும் கூட திருட்டுத்தனமாகவாவது, நாம் ஏமாந்த நேரம் பார்த்தாவது, சோற்றுப் பானையை உருட்டும், பால் டம்ளரைப் பார்க்கும், சாதாரண சம்பவம்தானே இது! பூனைக்கென்ன நம்மீது "பக்தி"யா, நாம்தான் என்ன ஆண்டவர்களா நம்மீது பூனைகட்கு "பக்தி" சுரக்க, ஆண்டவர்களாகவே இருந்தாலும் பக்தி கொள்ளுமா, உணவு கிடைத்துவிட்டது இரண்டொரு நாள் ஆகவே "பழக்கம்" மறுபடியும் அங்கேயே போ—உணவு கிடைக்கிறது என்று தூண்டுகிறது—பூனை வருகிறது—அவ்வளவுதான்! மரம் பழுத்தால் வெளவாலை "வா" என்று கூவி வருந்தி அழைக்கவா வேண்டும்—தானே வரும் பழத்தைக் கொத்த! அதற்கென்ன பக்தியா மரத்தின்மீது, "ஆஹா என்ன அற்புதம்! என்ன அற்புதம்! மரம் பழுத்தவுடனே வெளவால் வந்துவிட்டது பார்த்தீர்களா! மரத்தின்மீது வெளவாலுக்கு எவ்வளவு காதல் எவ்வளவு பக்தி!" என்று நாம் வெளவாலைப் படம் பிடித்துப் போடவேண்டுமா? போஸ்டரிலே பெரிய எழுத்திலே போடவேண்டுமா "பழுமரம் நோக்கிப் பழம் வெளவால் வரும்

(4-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்திருந்தால் அந்த வார்த்தையை வைத்துக்கொண்டே அவளிடம் நீண்ட நேரம் விளையாடியிருப்பான்! ஆனால் அவன் மனமோ குழம்பிய நிலையில் அப்பொழுதிருந்தது. ஆகவே மௌனமாக சிறிது நேரமிருந்துவிட்டு, பெட்டியிலிருந்த, உடைத்துப் பார்க்காத கடிதங்கள் அத்தனையையும் வெளியில் எடுத்தான்.

"யார் எழுதிய கடிதம் அத்தான் இவை!"

"வேணி, அழுகிய இதயத்திலிருந்து முளைத்த காளான்கள் இவை!"

"புரியும்படி கூறுங்கள் அத்தான்!"

"கண்ணே! எனக்கு ஒரு பெண் துரோகம் செய்தாள்! அந்தத் துரோகத்தை மறைப்பதற்காக உயிரற்ற வெறும் காகித கடிதங்களை விடாது தூது அனுப்பிக்கொண்டிருக்கிறாள்!"

"ஒரு பெண்" வேணியின் இதழ்கள் முணுமுணுத்தன! அத்தானுக்கும் வேறொரு பெண்ணிற்கும் முன்னரே தொடர்பு இருந்திருக்கிறதா என்று அவள் இதயத்தில் ஓர் ஐயம் ஏற்பட்டது! ஆண் பெண் தொடர்பு என்றால் அது காதலாகத்தானா இருக்கவேண்டும், ஏன் அது அவர் கலைத் துறை சார்பானதாக இருக்கக்கூடாது என்று எண்ணி தன் உள்ளத்தைத் தைரியப்படுத்த முயன்றாள். அந்தக் கடிதங்களில் ஒன்றைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, ஒன்றை எடுக்கப்போனாள்!

"வேணி! வேணி! தொடாதே! அதனைத் தொடுவதன் மூலம் தூய உன் கையில் களங்க மேற்பட்டு விடும்!"

வேணி அசைவற்று நின்று விட்டாள். அவள் ஐயம் வளரத் தொடங்கியது. அவள்முகமும்மாறியது! இதயத்தில் வேதனைத் துளிகள் சிறிது சிறிதாகச் சிந்த ஆரம்பித்தன. தைரியம் கொண்டு திரும்பவும் பேச ஆரம்பித்தாள்.

"அத்தான்! இக் கடிதங்கள் எதற்காக எழுதப்படுகின்றன என்பதையாகிலும் நான் அறியலாமா?"

"வேண்டாம்! வேணி! உன் உள்ளம் வருத்தமடைய வேண்டுமானால் மேலும் மேலும் கேள்!"

"இல்லை, இல்லை அத்தான்! இனி நான் இதைக் குறித்து கேட்கவில்லை! .....ஆனால் ஒன்று, அதனை ஏன் தாங்கள் பிரித்துப் படித்துப் பார்க்கவில்லை?"

"அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது எனக்கு நன்கு தெரியும்!"

வேணி பேசாதிருந்தாள். குமார் தன் நெற்றியைத் தடவிக்கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான்.

"வேணி!"

"சொல்லுங்கள் அத்தான்!"

"விரைவாகச் சென்று தீப் பெட்டி கொண்டுவா?"

ஏன் என்று அவள் கேட்கவில்லை. எழுந்து சென்று, தீப் பெட்டியோடு திரும்பினாள்!

குமார் அக்கடிதங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தான்! தீக்குச்சியைக் கிழித்து, அவற்றிற்கு நெருப்பிட்டான். புகைவிட்டு அவை எரிந்து கருகிக்கொண்டிருந்தன! சுட்டுப் பொசுக்கிவிட்டேன் என்று வாய்விட்டுக் கூறினான் குமார்.

வேணி வியப்போடு அவன் செயலைப்பார்த்துக் கொண்டிருந்தாள். கோபத்தோடு கடிதங்களுக்குத் தீயிட்டகுமார், அது எரிந்து சாம்பலாவதைக் கண்டதும் ஏனோ மனம் வருந்தத் தொடங்கினான்.

"வேணி! இந்தப்புகை உன் உடலில் பட்டால், பளிங்குபோன்ற உன் உள்ளத்திலும் பாழும் கறை படிந்து விடும்—வேண்டாம்—வேண்டாம் வேணி, நீ இதைத் தெரிந்துகொள்ள வேண்டாம், வா, வா, அந்த அறைக்குப் போகலாம், இந்தப் புகை உன் அழகிய உடல் மீது படவேண்டாம்" என்றுகூறி குமார், வேணியை அழைத்துக் கொண்டு வேகமாக வேறு அறைக்குச் சென்றான்.

அங்குச் சென்றதும் அந்த அறையும் குமாருக்குப் பிடிக்கவில்லை. "என்ன வேணி! ஏதோ துர்நாற்றம் வருகிறது" என்று சொல்ல வாயெடுத்தான், ஆனால் சொல்லவில்லை. வார்த்தைகள் வெளியே புறப்படும் நேரத்தில்தான் அவனுக்குத் தெரியவந்தது துர்நாற்றம் அறையிலேஇல்லை, தன்உள்ளத்திலே இருக்கிறது என்று! குமுதம் அவன் மனத்திரையிலே வந்து நின்றாள் கசங்கிய கண்களோடு—அவன் முகம் சுருங்கிற்று.

அத்தான் என்று சொல்ல வாயெடுத்தாள் வேணி, அவளுக்கும் வார்த்தை வரவில்லை! நாக்கிலே ஏதோ ஒருவித பசை, இருந்துகொண்டு பேச்சை மறிப்பதுபோல் தென்பட்டது அவளுக்கு!

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் இன்பபுரிப் பயணம் செய்து கொண்டிருந்த இருவர் உள்ளத்திலும் இப்போது பற்பல எண்ணப் புயல் வீசத் தொடங்கிற்று.

அவன் பேசவில்லை!

அவளும் பேசவில்லை!

ஏதோ ஒருவித பயங்கரமான அமைதிநிலவிற்று அந்த அறையில்! எங்கும்நிறைந்த அகண்ட வெளியில் பாதாள உலகை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும ஒரு ரயில் வண்டியில் இரண்டே இரண்டு பிரயாணிகள் மௌனமாகப் பயணம் செய்வதுபோன்ற உணர்ச்சி ஏககாலத்தில் இருவருக்கும் ஏற்பட்டது! (தொடரும்)

நீங்கள் படித்துவிட்டீர்களா?

"கார்ல் மார்க்ஸ்"

(ஆசிரியர்: எஸ். சதாசிவம்)

நமது நாட்டின் இன்றைய நிலைபற்றியும், இதை மாற்றியமைக்க மார்க்சீயம் எவ்வளவு அவசியமானது என்பது பற்றியும், மார்க்சீயத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், வேகமும் விறுவிறுப்பும் கொண்ட தமிழ் நடையில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அரசியல் தலைவர்கள் முதல் சாதாரண பாட்டாளிகள் வரையில் அனைவரும் படிக்கவேண்டிய முக்கியமான புத்தகம்.

விலை ரூ. 1—0—0 தபாலில் ரூ. 1—2—0

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு

பகுத்தறிவுப் பாசறை,

147, பவழக்காரத் தெரு, :: சென்னை 1.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

வில்லே, கொஞ்சம் நாளே காலே யிலே வந்துடுங்க சார்" என்று பதில் கிடைக்கும் வெள்ளிக் கிழமை. ''நாளே காலேயிலே'' மட்டும் என்ன சொன்னபடி கொடுத்துவிடுவார்களா? "காலே யிலே என்று சொன்னல் என்ன சார் இவ்வளவு காலங்காத்தாலே வந்துட்டீங்க! மத்தியானமா மெள்ள சாப்பிட்டு கிப்பிட்டு சாயங் காலமா வரப்படாது!' என்று பதில் சொல்வார்கள். இல்லாவிட் டால் "இன்று ஆபீசர் வரலே, போய்யா போ, நாளேக்கு வா" என்ற பதில் கிடைக்கும். இப் படியே அந்தத் தோழர் அலேந்து திரிந்து பங்கீடு அட்டை வாங்குவ தற்குள் சரியாக இரண்டு மாதமும் இருபத்தேழு நாட்களும் ஆகிவிட் டிருக்கும்! பங்கீடு இலாகா மட்டுந் தான் இப்படி என்று எண்ணி விடாதீர்கள் சர்க்கார் இயந்திரத் தின் எல்லாப் பகுதிகளுமே இப் படி ஆமை வேகத்தில்தான் சுழல் வது வழக்கம். இந்த ஆமை வேகத்திற்குக் கொடுக்கப்பட் டுள்ள அருமைத் திருநாமம்தான் சிகப்பு நாடா ஐயா சிகப்பு நாடா!

இந்த சிகப்பு நாடாவில் நம்மைப் போன்ற சாமானிய மக்கள் மட்டும் தான் சிக்கிக்கொண்டு விழிப்பார் கள் என்பதில்லே. மந்திரிகள் கதியும் இப்படித்தான்! இதோ பாருங்கள் சென்னே அமைச்சர் **குருபாதம் அவர்கள்** சென்ற வாரம் பேசியிருப்பதை:

"சிகப்பு நாடாவைத் தாண்டி ஒன்றுமே செய்யமுடியவில்லே! நான் அனுப்பிய குறிப்பு ஒன்று இலாகாகளால் பரிசீலனே செய்யப் பட்டு **நாலு மாதம்** கழித்துத்தான் என்னிடம் திரும்பி வந்தது"

எப்படி சிகப்பு நாடாவின் மகத் துவம்! அணுக்குண்டு அணுக் குண்டு என்று பிரமாதமாகப் பேசு கிறார்களே, அந்த அணுக்குண்டே வந்தால்கூட இந்த சிகப்பு நாடா முன்னால் அடங்கி ஒடுங்கித்தான் இருந்தாக வேண்டும்! இந்த சிகப்பு நாடாவின் சக்தி அவ்வளவு அதி கம்! சர்வ வல்லமை பொருந்திய சென்னே சர்க்கார் மந்திரிகளேயே இப்படித் திக்குமுக்காட வைக் கிறதே இந்த சிகப்பு நாடா, இது வேறுயாரைத்தான் மிச்சம் மீதி யாக விட்டுவைக்கும் என்று நாம் நம்பமுடியும்?

திராவிடர் இயக்க நூல்கள்

பெரியார்

புதியதோர் உலகு செய்வோம்	0	6
சித்திரபுத்திரன் எழுதுகிறார்	0	6

இளஞ்செழியன்

தமிழன் தொடுத்த போர்	1	12
திராவிடம்தான் வேண்டாமா	0	8
ஈரோட்டுப் பாதை	0	6

ந. சி. கந்தையா

திராவிடம் என்றால் என்ன	0	6
ஆரியத்தால் விளேந்த கேடு	0	6
பெண்கள் போராட்டம்	0	6
சிந்துவெளித் தமிழர்	0	8
ஆரியர் தமிழர் கலப்பு	0	8
மரணத்தின்பின்	0	8
உலக அறிவியல் நூல்	0	8
முச் சங்கம்	0	8
பாம்பு வணக்கம்	0	4
சங்க காலத் தமிழ்நாடு	0	10
அகத்தியர் யார்	1	0
தமிழர் சரித்திரம்	3	0
பழந் தமிழர்	1	12
மனிதன் எப்படிதோன்றினன்	0	8
ஆதி மனிதன்	0	8
திருவள்ளுவர்	0	8
பெண்களும் சமூகமும்	0	8
திருமணம்	0	12
நமது தாய்மொழி	0	8
நூலகங்கள்	0	8
மறைந்த நாகரிகம்	1	4
தமிழர் யார்	0	8
பெண்கள் உலகம்	0	12
ஆரிய வேதங்கள்	0	10
திராவிடர் நாகரிகம்	0	10
தமிழாராய்ச்சி	0	6
தமிழ் விளக்கம்	0	6
தமிழர் சமயம் எது	0	8

பாரதிதாசன் நூல்கள்

காதல் நினேவுகள்	0	12
தமிழ் இயக்கம்	1	0
நல்ல தீர்ப்பு	0	10
இசையமுது	0	10
அழகின் சிரிப்பு	1	0
பாண்டியன் பரிசு	3	8
பாரதிதாசன் கவிதை	3	8
எதிர்பாரா முத்தம்	1	4
குடும்ப விளக்கு I	0	6
குடும்ப விளக்கு II	0	10
அமைதி	0	8

தளபதி C. N. A.

பணத்தோட்டம்	1	0
ஜமீன் இனும் ஒழிப்பு	1	0
உலகப் பெரியார்	1	0
கற்பனேச் சித்திரம்	1	0
சிறு கதைகள்	1	0
நிலேயும் நினேப்பும்	0	12
ரேடியோவில் அண்ணு	0	12
குமரிக் கோட்டம்	1	0
நாடும் ஏடும்	0	6
நல்ல தீர்ப்பு	0	4
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8
திராவிடர் நிலே	0	8
விடுதலேப் போர்	1	0
கம்பரசம்	1	8
ஆரியமாயை	1	0
வர்ணுஸ்ரமம்	0	12
தமிழரின் மறுமலர்ச்சி	0	8
மேதினம்	0	5
ரோமாபுரி ராணிகள்	2	4

மற்ற நூல்கள்

காரல் மார்க்ஸ்	1	0
வீராயி (கவிதை)	1	0
சிறந்த பேச்சாளர்கள்	1	0
கி. பி. 2000	1	12

பகுத்தறிவுப் பாசறை, 147, பவழக்காரத் தெரு, சென்னே.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)